MINISTRY OF MANPOWER

21 March 2020

# வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்கள் மற்றும் முதலாளிகளுக்குப் புதுப்பிக்கப்பட்ட ஆக அண்மைய அறிவுரை - ஓய்வு நாள்களில் வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்கள் வீட்டிலேயே இருக்கும்படி வேண்டுகோள்

கொவிட்-19 உள்ளூரில் மேலும் பரவுவதைக் குறைக்க சிங்கப்பூர் அரசாங்கம், மக்களுக்கிடையே பாதுகாப்பான இடைவெளி இருப்பதற்கு, மேலும் கடுமையான நடவடிக்கைகளை அமல்படுத்தும் என்று 20 மார்ச் 2020 அன்று சுகாதார அமைச்சு அறிவித்தது. மக்களிடையே நெருக்கமான தொடர்பு மற்றும் அதிகமான மக்கள், மிக அருகாமையில், நீண்ட நேரத்திற்கு ஒன்று கூடுவதைக் குறைப்பதற்கு இந்நடவடிக்கைகள் உதவும்.

2. தங்கள் ஓய்வு நாள்களில், வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்களும் (FDWs) அதேபோல், தங்களுக்கிடையே பாதுகாப்பான இடைவெளியைக் கடைப்பிடிக்க எதிர்ப்பார்க்கப்படுகிறார்கள். பாதுகாப்பான இடைவெளியை மேற்கொள்ள பின்வரும் நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. மனித வள அமைச்சு (MOM), இல்லப் பணிப்பெண்களுக்கான மையம் (CDE), வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்களுக்கான சமூக ஆதரவு மற்றும் பயிற்சி கழகம் (FAST) ஆகியவை வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்களுடனும் முதலாளிகளுடனும் இவற்றைப் பகிர்ந்துகொள்கின்றன.

## ஓய்வு நாள் குறித்த அறிவிப்பு

3. இந்தக் கால கட்டத்தில், வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்கள் தங்கள் ஓய்வு நாளை வீட்டிலேயே கழிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். வெளியில் சிறு சிறு வேலைச் செய்ய வேண்டியிருந்தால், வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்கள் தங்கள் ஓய்வு நாளை வார நாளில் எடுக்கும்படி ஊக்குவிக்கப்படுகிறார்கள், ஏனெனில் அன்றுதான் பொது இடங்களில்

மக்கள் கூட்டம் குறைவாக இருக்கும். ஓய்வு நாளில் வீட்டிலிருக்க வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்கள் ஒப்புக்கொண்டால், முதலாளிகள் ஓய்வு நாளில் அவர்களை வீட்டு வேலைச் செய்யச் சொல்லக்கூடாது. ஓய்வு நாளை விட்டுக் கொடுக்க வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்கள் முதலாளிகளுடன் பரஸ்பரம் ஒப்புக்கொண்டால், அதற்கு ஈடாக முதலாளிகள் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும்.

**ஓய்வு நாளில் பாதுகாப்பான இடைவெளியைக் கடைப்பிடித்தல்**

4. வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்கள், தங்கள் **ஓய்வு** நாளை வெளியில் கழிக்க விரும்பினால், இவற்றை பின்பற்ற வேண்டும்:

- பெரியக் கூட்டமாய் கூடுவதைத் தவிர்க்க வேண்டும் அல்லது லக்கி பிளாஸா, சிட்டி பிளாஸா, பெனின்சுலா பிளாஸா போன்ற இடங்களில் நேரத்தைக் கழிப்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டும்;
- நல்ல தனிப்பட்ட சுகாதாரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், மற்றவருடன் கைக்குலுக்காமல் இருப்பதன் மூலம் உடல் ரீதியான தொடர்பைக் குறைத்துக்கொள்ளலாம். ஒருவரிடமிருந்து ஒருவர் பாதுகாப்பான இடையெளியைப் பின்பற்ற வேண்டும்; மற்றும்
- உணவு, பானங்கள் மற்றும் இதர தனிப்பட்ட உடமைகளைப் பகிர்ந்துக்கொள்ள வேண்டாம்.

ஓய்வு நாளில் வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்கள் வெளியே செல்லுமுன், முதலாளிகள் மேல் குறிப்பிடப்பட்டவற்றை அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும். சமூகப் பொறுப்புடன் நடந்துக்கொள்ள, வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்களும் தங்களின் சொந்த சுகாதாரத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டும். உடல் நலமில்லையெனில் மருத்துவரைச் சென்று காண வேண்டும். பிறருக்கு நோய் பரவுவதை தடுக்க, அவர்கள் வெளியே செல்லக்கூடாது.

5. முதலாளிகளும், வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்களும், குறிப்பாக இந்தக் கால கட்டத்தில், தங்களுக்கிடையில் வெளிப்படையானத் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் ஊக்கமளிக்கிறோம். ஆக அண்மைய நிலவரங்களைத் தெரிந்து வைத்துக்கொள்ள, www.moh.gov.sg எனும் இணையத் தளத்தை அடிக்கடி நாடுங்கள்.

**மனித வள அமைச்சு, இல்லப் பணிப்பெண்களுக்கான மையம், வெளிநாட்டு இல்லப் பணிப்பெண்களுக்கான சமூக ஆதரவு மற்றும் பயிற்சி கழகம்**